பக்கங்கள்:-24

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | கார்த்திகை 10 | வியாழக்கிழமை | 27.11.2025 | அதிர்வு 119

## சீரற்ற காலநிலையால் 3 ஆயிரம் பேர் பாதிப்பு

### 254 வீடுகள் சேதம்



இலங்கையில் நிலவும் சீரற்ற கால நிலையால் 877 குடும் பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 58 பேர் 06




# மாவீரர் நாள் இன்று!

## வரலாறாய் உறங்குகின்ற காவிய நாயகர்களை பேரெழுச்சியுடன் வணங்கத் தமிழர் தேசம் தயார்

**தமிழர்களின் உரிமைக்காக - தமிழீழ இலட்சியத்துக்காகத் தமது இறுதி மூச்சு வரைப் போராடி – களமாடி சாவினைத் தழுவிய வீரமறவர்களான மாவீரர்களுக்குத் தமிழினம் திரண்டு அஞ்சலி செலுத்தும் 'மாவீரர் நாள்' இன்றாகும்.**

**இன்று மாலை 6.05 மணிக்குத் தாயகமெங்கிலும் புலம்பெயர் தேசங்களிலும் சுடரேற்றப்பட்டு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்படும்.** 06

# உலகத் தமிழர்களின் தலைவரே பிரபாகரன்

## நாடாளுமன்றத்தில் கஜேந்திரகுமார் முழக்கம்

“ஈழத் தமிழர்களினது மட்டுமல்ல, உலகத் தமிழர்களினதும் தலைவராக இருக்கக்கூடிய தலைவர் பிரபாகரன்அவர்களுடைய71ஆவது பிறந்தநாள் இன்றாகும்.” – என்று இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. நேற்று தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 06






மாகாண சபை தேர்தலை அநுர அரசு உண்மையில் நடத்துமா அல்லது தேர்தலை நடத்துவோம், நடத்துவோம் என்று இழுத்தடித்து, புதிய அரசமைப்பின் கீழ் மாகாண சபை முறைமையை அடியோடு இல்லாதொழிக்கும் திட்டத்தை அது முன்னெடுக்கின்றதா என்ற கேள்விதான் இப்போது தமிழர் அரசியலில் பிரதான பேசுபொருளாக இருக்கின்றது.

தமது தேர்தல் விஞ்ஞாபனங்களில் வாக்குறுதி அளித்தபடி மாகாண சபை தேர்தலை அரசாங்கம் இந்த காலத்துக்குள் நடத்தி முடித்திருக்க வேண்டும். ஆயினும் அரசுக்குள் வலிமையான ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா போன்றோரின் கடும் எதிர்ப்புக் காரணமாக மாகாண சபை தேர்தலை நடத்த முடியாத நிலையில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க இருக்கின்றார் என்றும், நிலைமையை சமாளிப்பதற்காக விரைவில் தேர்தல் என்று அவ்வப்போது அவர் கயிறு விடுகின்றார் என்றும் பொதுவாக தமிழ் மக்கள் மத்தியில் கருத்து நிலைப்பாடு உண்டு. 06




# நல்லூரில் மேதகுவின் பிறந்த நாள் நிகழ்வு

(எஸ்.நிதர்ஷன்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனின் 71 ஆவது பிறந்த நாள் நேற்று யாழ். நல்லூரில் கொண்டாடப்பட்டது.

நல்லூரில் உள்ள தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்துக்கு முன்பாக மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு அமைந்துள்ள நினைவாலயத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது பொங்கல் பொங்கி மக்களுக்குப் பரிமாறப்பட்டது. அத்தோடு கேக், இனிப்பு மற்றும் மரக் கன்றுகள் உள்ளிட்டவையும் மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.











# சட்டவிரோத கட்டுமானங்கள் தொடர்பில் உள்ளூராட்சி மன்றங்கம் அசமந்தப்போக்கு

## மக்களின் முறைப்பாடுகளை உதாசீனம் செய்யும் அதிகாரிகளுக்கு எதிராக விசாரணை நடத்தப்படும் என்று வடக்கு ஆளுநர் எச்சரிக்கை

சட்டவிரோத கட்டுமானங்கள் தொடர்பில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு மக்கள் முறைப்பாடளித்தால், அதை உடனடியாகச் சென்று பார்வையிட்டு நடவடிக்கை எடுக்காது, கட்டுமானம் முடிவடைந்த பின்னரே ஆராயும் நிலை காணப்படுவது குறித்து மக்கள் தமக்கு பல முறைப்பாடுகளை முன்வைப்பதாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் சுட்டிக்காட்டியதுடன், மக்களின் இவ்வாறான முறைப்பாடுகளுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும், தவறும் பட்சத்தில் உரிய அதிகாரிகளுக்கு எதிரான விசாரணை முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

வடக்கு மாகாண நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், சுற்றுலா, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அமைச்சின் கீழ் இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் தொடர்பில் ஆராயும் மாதாந்தக் கலந்துரையாடல் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுடனான மாதாந்தக் கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

உள்ளூராட்சி மன்றங்களின் ஆதன மதிப்பீட்டு நடவடிக்கைக்கு விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் ஒத்துழைப்பு போதியளவில் கிடைக்கப் பெறாத நிலையில் தனியார் ஊடாக அந்தப் பணிகளை நடைமுறைப்படுத்துவதாக உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் தெரிவித்தனர். இருப்பினும் 2026ஆம் ஆண்டுக்குள் அந்தப் பணிகளை நிறைவுறுத்த வேண்டியிருப்பதால், தனியார் மற்றும் விலைமதிப்பீட்டுத் திணைக்களம் இரண்டினதும் ஒத்துழைப்புடன் அதைச் செய்து முடிக்குமாறு ஆளுநர் குறிப்பிட்டார்.

தொடர்ந்து முன்னேற்ற மீளாய்வு இடம்பெற்றபோது, உள்ளூராட்சிஅமைச்சு, உள்ளூராட்சித் திணைக்களம், மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம், வீதி அபிவிருத்தித் திணைக்களம், சுற்றுலாப் பணியகம், வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை என ஒவ்வொரு திணைக்களங்களினதும் ஒவ்வொரு திட்

தொடர்ச்சி▼














# சட்டவிரோத கட்டுமானங்கள் தொடர்பில் உள்ளூராட்சி மன்றங்கம் அசமந்தப்போக்கு

## மக்களின் முறைப்பாடுகளை உதாசீனம் செய்யும் அதிகாரிகளுக்கு எதிராக விசாரணை நடத்தப்படும் என்று வடக்கு ஆளுநர் எச்சரிக்கை

தொடர்ச்சி▲

டங்களினதும் முன்னேற்றங்கள் பற்றி விரிவாக ஆராயப்பட்டன.

பாடசாலை நேர மாற்றத்துக்கு ஏற்ப போக்குவரத்து ஒழுங்குகளை முறைப்படுத்தும் நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் பொது முகாமையாளர் தெரியப்படுத்தியதுடன், தூய்மை இலங்கை செயற்றிட்டத்தின் கீழான பஸ் நிலையங்களின் சீரமைப்புப் பணிகளின் உத்தேச மதிப்பீடுகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழான முன்னேற்றங்கள் ஆராயப்பட்டபோது, கிளிநொச்சி மாவட்டத்தின் செயற்பாடுகள் பின்னடைவான நிலைமையில் இருப்பது அவதானிக்கப்பட்டதுடன், ஒப்பந்தகாரர்களால் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் பல்வேறு பிரச்சினைகளும் சுட்டிக்காட்டப்பட்ட நிலையில், விரைந்து சீர் செய்து நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநர் குறிப்பிட்டார்.

சுற்றுலாத்துறைப் பணியகம் ஏனைய திணைக்களங்கள் மற்றும் சுற்றுலாத்துறையுடன் தொடர்புடையதாகப் பணியாற்றும் தரப்புக்களுடன் இணைந்து செயற்பட வேண்டும் என ஆளுநர் வலியுறுத்தியதுடன், சுற்றுலாத்தலங்களில் மலசலகூடம் இல்லாமல் உள்ளமை, இருக்கின்ற மலசலகூடங்களும் பயன்படுத்தக் கூடிய நிலையில் இல்லாமை ஆகிய விடயங்களையும் சுட்டிக்காட்டினார். மேலும், இருக்கின்ற மலசலகூடங்களைப் புனரமைத்து துப்புரவு நடவடிக்கைகளை ஒப்பந்த அடிப்படையில் தனியாருக்கு வழங்குவதற்கான ஆலோசனையையும் வழங்கினார்.

முதலீட்டாளர்களின் அவசியத்தை வலியுறுத்திய ஆளுநர், சபைகளின் செயலாளர்கள் நேர்சிந்தனையுடன் அதனை அணுக வேண்டும் என்றும், ஏற்கனவே முதலீடு செய்துள்ளவர்களால் வரி வருமானங்களைச் சபைகள் பெற்றுக் கொள்ளும் நிலையில், அத்தகைய முதலீட்டாளர்களுக்கான உதவிகளைச் செய்து கொடுக்குமாறும் கோரினார்.

மோசமான காலநிலை எதிர்வரும் நாட்களில் எதிர்வுகூறப்பட்டுள்ள நிலையில்அவற்றுக்தயாராகஇருக்குமாறுஆளுநர் கேட்டுக்கொண்டதுடன், சபைகளின் செயலாளர்கள் பிரதேச இடர்முகாமைத்துவக் குழுக்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்றும், இடர்நிலைமைகளின்போது செயலாளர்கள் தங்கள் கைத்தொலைபேசிகளை இயங்குநிலையில் வைத்திருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர் – நிதி, திட்டமிடல், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், மாகாணப் பணிப்பாளர்கள், மாநகர சபைகளின் ஆணையாளர்கள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் பங்கேற்றனர்.
















# மேதகுவின் பிறந்தநாளை கேக் வெட்டி கொண்டாடிய விசுவமடு இளைஞர்கள்

**(பா.சதீசன்)**

முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பு, விசுவமடு இளைஞர்கள் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப் பிள்ளை பிரபாகரனின் 71ஆவது பிறந்தநாளை இனிமை யாக கேக் வெட்டி நேற்று மாலை சிறப்பாகக் கொண்டாடினர்.

இந்த நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தவி சாளர் வேலாயுதம் கரிகாலனும் கலந்துகொண்டு கேக் வெட்டி இளைஞர்களுடன் இணைந்தார்.

அந்த வீதியால் சென்ற பொதுமக்களுக்கும் கேக் வழங்கி, தலைவரின் பிறந்தநாளை இளைஞர்கள் மகிழ்வோடு கொண் டாடினர்.











## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தப் பின்புலத்தில் அண்மையில் லண்டனுக்கு விஜயம் செய்த ரில்வின் சில்வாவுக்கு புலம்பெயர்ந்த தமிழர்கள் அங்கு கடும் எதிர்ப்புக் காட்டினர் என்பது தெரிந்த விடயம்தான்.

ஆயினும் இந்தப் பின்புலத்தில் சில புலம்பெயர் தமிழ்ப் பிரமுகர்களுடன் சத்தம் சந்தடி இன்றி ஒரு சந்திப்பை நடத்தி இருக்கிறார் ரில்வின் சில்வா.

ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையான தமிழ்ப் பிரமுகர்கள் லண்டன் ஹெய்ஸில் அவரைச் சந்தித்துக் கலந்துரையாடினர் எனத் தெரிகிறது.

ரி.பி.ஸி. இயக்குனர் வீ.இராமராஜ், ரி.பி.ஸி. அரசியல் ஆய்வாளர் வி.சிவலிங்கம், சமூக சேவையாளர் ஆர்.ஜெயதேவன், தமிழர் தகவல் நடுவகத்தின் இயக்குநர் சார்ள்ஸ் உட்பட சிலர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர் எனத் தெரிகின்றது.

புதிய அரசியல் யாப்புக்கு முன்பாக மாகாண சபை தேர்தல் நடத்தப்படும் என்று இந்த சந்திப்பின்போது ரில்வின் சில்வா உறுதியாகத் தெரிவித்தார் என இராமராஜ் குறிப்பிட்டார்.

“தமிழ் மக்கள் எங்களுக்கு வாக்களித்து உள்ளார்கள். எங்கள் மீது அந்த மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை நாங்கள் வீணடிக்க மாட்டோம். மாகாண சபை தேர்தல் நடத்துவோம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கின்றோம். அதனை நிறைவேற்றுவோம். அது தொடர்பில்





சட்டமா அதிபரின் ஆலோசனையைத் தொடர்ந்து பெற்று உரிய நடவடிக்கை எடுப்போம்” – என்று இந்த சந்திப்பின் போது ரில்வின் சில்வா குறிப்பிட்டார் என இராமராஜ் தெரிவித்தார்.

புதிய யாப்பு உருவாக்கம், மட்டக்களப்பு மாவட்டத்தில் தொல்பொருள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப் படுகின்ற நடவடிக்கைகள், திருகோணமலை புத்தர் சிலை விவகாரம், இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பொதுமக்களின் காணி சம்பந்தப்பட்ட விடயங்கள் ஆகியவை குறித்து விரிவாக பேசினோம் என்று இராமராஜ் பின்னர் தெரிவித்தார்.

மாகாண சபை தேர்தல் நடத்துவோம், நடத்துவோம் என்று கயிறைக் கொடுத்தே காலத்தை இழுத்தடித்து, புதிய அரசமைப்பு வரும்போது அந்தத் திட்டத்தை கைவிடலாம் என்று அரசு தரப்பு மீது தமிழ் தலைவர்கள் சந்தேகம் கொண்டுள்ளனர். குற்றம் சுமத்துகின்றனர். அந்த வகையறாவில் இந்த வாக்குறுதியும் அடங்குமா அல்லது கொடுத்த வாக்குறுதி படி தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

* * *

மாகாண சபைத் தேர்தல்கள் குறித்து அரசாங்கப் பக்கத்தில் கொழும்பில் ஓர் உயர் மட்டத்துடன் தொடர்புடைய செய்தி மூலம் வித்தியாசமான தகவலைத் தந்தது.

அரசாங்கத்துக்கு மாகாண சபை தேர்தலை நடத்துகின்ற முழு விருப்பம் உள்ளது. ஆனால் நாடு முழுவதிலும் உள்ள ஒன்பது மாகாண சபைகளையும் ஒரே சமயத்தில் தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர வேண்டுமென்ற பேராசையும் அதற்கு உள்ளது. அதுவே தேர்தலை தாமதித்து, ஆளுந்தரப்பு சந்தர்ப்பத்துக்குக் காத்திருப்பதற்குக் காரணம் என்று அந்த வட்டாரம் கூறுகின்றது.

வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏழு மாகாண சபைகளையும் கைப்பற்றி விடலாம், ஆனால் வடக்கு, கிழக்கு மாகாண சபைகளையும் கைப்பற்றுவது நெருக்கடியானது, மிகப் போட்டியானது என ஆளுதரப்பு நினைக்கின்றது.

வடக்கு, கிழக்கு மக்களை வளைத்துப் போட்டு தன் வலையில் வீழ்த்துவதற்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டுதான் மாகாண சபைத் தேர்தல்களை அரசு அறிவிக்கும் என அந்த வட்டாரம் தெரிவித்தது.

வடக்கு, கிழக்குத் தமிழர்களை கவர்ந்திழுப்பதற்கான சில திட்டங்கள் ஆளுந்தரப்பிடம் இருக்கின்றன என்றும், மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கு சொற்ப காலம் தாருங்கள்என்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க கோருவது இந்தத் தேவையை நிறைவு செய்வதற்கான காலத்தைத் தான்.

திருகோணமலை புத்தர் சிலை விவகாரத்தில் திடீர் குத்து கரணம் அடித்து ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையும், மாவீரர் தினத்தை ஒட்டி நினைவேந்துவோர் மீதான கெடுபிடி தளர்த்தலும் கூட இந்த வகையறாக்குள் அடங்கும் என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கு கிழக்கு தமிழர்களின் ஆதரவை வளைத்துப் போட்டுக் கொண்டு அதற்குப் பின் மாகாண சபை தேர்தலை நடத்துவது என்று அரசு காத்திருக்குமானால் ‘அது, கடலில் அலை ஓய்ந்த பின்னர் குளிக்கலாம் என்று கரையில் காத்திருப்பதற்கு’ ஒப்பானதாகத்தான் போய் முடியும் என்று நினைக்கிறேன்.

# யாழ்.நகரில் போதைப்பொருளுடன் பெண் ஒருவர் உட்பட ஐவர் சிக்கினர்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஹெரோயின் மற்றும் கஞ்சா போதைப்பொருள்களுடன் 5 பேர் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் பொலிஸார் நேற்று நடத்திய சோதனை நடவடிக்கைகளின் போது இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

ஹெரோயின் போதைப்பொருள்களுடன் 4 ஆண்களும், கேரள கஞ்சா போதைப்பொருளுடன் ஒரு பெண்ணும் கைது செய்யப்பட்டனர்.

மில்லிகிராம் மற்றும் கிராம் அளவில்



மீட்கப்பட்ட போதைப்பொருட்கள் தொடர்பில் சந்தேகநபர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டு அவர்களை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## மாவீரர் நாள் இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதற் களப்பலியான லெப். சங்கர் வீரமரணமடைந்தது 1982ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி மாலை 6.05 மணிக்கு. லெப். சங்கர் தனது தாயகத்துக் காகத் தன் உயிரை அணைத்துக் கொண்ட அதே நாள், அதே நேரமான மாலை 6.05 மணியே மாவீரர் நாளில் ஈகைச் சுடரேற்றும் நேரமானது.

மாவீரர் நாள் நிகழ்வுகள் இன்று தாயகமெங்கும் பேரெழுச்சியுடன் இடம் பெறவுள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அடர்க்கமைய மாவீரர் துயிலும் இல்லங்கள் சிரமதானம் செய்யப்பட்டு அஞ்சலி நிகழ்வுகளுக்குத் தயார்ப்படுத்தப் பட்டுள்ளன.

துயிலும் இல்லங்களில் மாவீரர் தினத்துக்கான ஏற்பாடுகள் அனைத்தும் நேற்று மாலையே பூர்த்தியாகியுள்ளன. துயிலும் இல்லங்களைச் சூழச் சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு நடுவில் கொடிக் கம்பம் நடப்பட்டுள்ளது. இன்று மாலை அங்கு நினைவேந்தல் நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

மாவீரர் துயிலும் இல்லங்களில் ஒழுங்கமைக்கப்பட்ட அஞ்சலி நிகழ்வுகளில் சரியாக மாலை 6.02 மணிக்கு மணி ஒலி எழுப்பப்பட்டு மாலை 6.05 மணிக்கு ஈகச் சுடரேற்றல் இடம்பெறும். இதன்போது மாவீரர் நாள் பாடல் ஒலிக்கவிடப்படும் என்று மாவீரர் தின ஒழுங்கமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, புலம்பெயர் தேசங்களிலும் இன்று மாவீரர் தின நிகழ்வுகளைப் பேரெழுச்சியுடன் அனுஷ்டிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## சீரற்ற காலநிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், 10 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் எழுவர் காயமடைந்துள்ளனர்.

மண்சரிவு, மரம் முறிவு மற்றும் வெள்ளம் உள்ளிட்ட அனர்த்தங்களாலேயே உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

4 வீடுகள் முழுமையாகவும், 250 வீடுகள் பகுதியளவும் சேதமடைந்துள்ளன.

சீரற்ற காலநிலையால் 33 குடும்பங்களைச் சேர்ந்த 104 பேர் மூன்று தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, அடுத்துசிலநாட்களுக்கு சீரற்ற காலநிலை தொடரும் என வளிமண்டளவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உலகத் தமிழர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வரவு – செலவுத் திட்டம் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

“தேசியத் தலைவருடைய போராட்டத்தை 2009 இற்கு முதலும் அதற்குப் பிறகும் மோசமாக விமர்சித்து கேவலப்படுத்திய தரப்புகளில் ஜே.வி.பி. பிரதான இடத்தை வகிக்கின்றது.

மஹிந்த தரப்பு இனவாதம் பேசிய போது, விடுதலைப் போராட்டத்தை அழிப்பதற்கு தத்துவ ஆசிரியர்களாக இருந்தவர்கள்தான் இந்த ஜே.வி.பியினர்.” – என்றும் கஜேந்திரகுமார் எம்.பி. கடும் விமர்சனங்களை முன்வைத்தார்.








# சாவகச்சேரியில் மாவீரர்களுக்கு அஞ்சலி!

## மேதகுவுக்கும் கேக் வெட்டி பிறந்தநாள் நிகழ்வு

(த.சுபேசன்)

யாழ். தென்மராட்சி, சாவகச்சேரி நகரப் பகுதியில் நேற்று பிற்பகல் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வும், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனின் 71ஆவது பிறந்தநாள் நிகழ்வும் இடம்பெற்றன.

இதன்போது அடுத்த சந்ததிக்கு இனத்தின் வரலாற்றைக் கடத்தும் முனைப்பில் சிறார்களின் கைகளால் ஈகைச் சுடரேற்றப்பட்டு – மாவீரகளுக்கான மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

அத்துடன் மேதகுவின் 71 ஆவது பிறந்தநாள் நிகழ்வு கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. இதன்போது 71 பாடசாலை மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

சாவகச்சேரி நகர சபையின் உபதவிசாளர் கிஷோரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வுகளில் பிரதேச சபை, நகர சபை உறுப்பினர்கள், சிறுவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## இன்று நினைவு நாள்

இன்று மாவீரர் தினம்.

தமிழ் மக்கள் தங்கள் மனதில் புனிதர்களாக நிறுத்தி பூஜிக்கும் ஆன்மாக்களை உணர்வோடு நினைவு கூர்ந்து மதிப்பளிக்கும் நாள்.

ஒரு காலத்தில் இந்த தினத்தை உருவாக்கி, அதை அனுஷ்டிக்கும் முறைமைகளை வெளிப்படுத்தி, நெறிப்படுத்தும் ஒரு கட்டமைப்பு இருந்தது.

ஆனால், கடந்த பல ஆண்டுகளாக அந்தக் கட்டமைப்பு இல்லாத போதும் - தென்னிலங்கைப் பேரினவாத சக்திகளின் கடும் அடக்குமுறைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் மத்தியிலும், அவற்றை மீறியும் - தமிழர் தாயகம் எங்கும் மக்கள் தம்மியல்பாக, பொது அறிவிப்புக்கள், வழிகாட்டல்கள், நெறிப்படுத்தல்கள் இல்லாமல் - சுயமாகவே இந்த மாவீரர் நாள் அனுஷ்டானங்களை மனதில் நிறுத்தி முன்னெடுத்து வருகிறார்கள்.

தம் இனத்தின் இருப்புக்காக, தமது தேசத்தின் தனித்துவ இறைமைக்காக தங்களையே ஆகுதியாகக் கொடுத்த தமது உறவுகளை மதித்து, மரியாதை செய்து, பூஜித்துப் போற்றுவதில் தமிழர் தேசம் மிக உறுதியாக இருக்கின்றது என்பதைக் காட்டும் விதத்தில் தமிழர் தாயகம் எங்கும் மாவீரர் தின நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்படுகின்றன.

தமிழ் மக்கள் தத்தமது மத நம்பிக்கைகளின் அடிப்படையிலும், பண்பாட்டு ரீதியிலும் அனுஷ்டிக்கும் ஒரு புனித நிகழ்வாக இந்த மாவீரர் தினம் மாறி இருக்கின்றது என்றால் அதற்கு மாவீரர்கள் தம் இனத்திற்காக செய்த தற்கொடையின் தாற்பரியத்தை தமிழினம் புரிந்து கொண்டுள்ளது என்பதுதான் அர்த்தம்.

நாட்டில் சட்டங்கள் எழுதப் பட்டவை. சட்டங்களை இயற்றும் நாடாளுமன்றம் அவற்றை மாற்றி அமைக்காத வரை சட்ட நடைமுறையாக்கமும் மாற வேண்டியதில்லை. மாறக்கூடாது.

ஆனால் இலங்கை தேசம் சட்டத்தை நடைமுறையாக்கும் செய்வதில் விநோத பண்புகளை - வித்தியாசமான போக்கை - வெளிப்படுத்துவது என்பது துலாம்பரமாகி வருகிறது.

உயிரிழந்தோரை நினைவு கூருவது தொடர்பான சட்டங்களில் எந்த மாற்றமும் வரவில்லை. ஆனால் கடந்த 15 - 16 ஆண்டுகளாக உயிரிழந்த தமது உறவுகளை தமிழர் தேசம் நினைவு கூருவதற்கு இலங்கைப் பொலிஸ் துறையும் அவற்றுடன் சேர்ந்து நீதிமன்றமும் தடைகளை விதித்து, தொல்லைகளைக் கொடுத்து, பலரை விளக்க மறியலில் வைத்து இம்சை படுத்தி வந்தன. இப்போது அரசு மாறி, அதிகார பீடமும் மாறியதும் - சட்டம் மாறாமலேயே - சட்டத்தின் நடைமுறையாக்கத்தரப்புகள் மாறியுள்ளன. தலை கீழாக மாறியுள்ளன.

சட்டம் மாற்றமடையாமல், நடைமுறையாக்கம் தலைகீழாக மாறி இருக்கின்றது என்றால், இதற்கு முன்னர் சட்ட நடைமுறையாக்கம் என்ற பெயரில் இவ்விடயத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தவறு என்பதுதானே அர்த்தம்?

இலங்கையில் சட்ட நடைமுறையாக்கத்தின் சீத்துவம் இதுதான். அரசு மாறினால் - அதிகாரத் தரப்பு வேறுபட்டால் - சட்ட நடைமுறையாக்கமும் சட்டத்தின் வியாக்கியானமும் கூட மாறிவிடும் போல...









# அரசியல் இலாபத்துக்காக மோதல்கள் வேண்டாம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்தல்

குறுகிய அரசியல் இலாபத்துக்காக இன, மத மோதல்கள் உருவாவதை தடுக்க வேண்டும்.தேசிய ஒருமைப் பாட்டுக் குழுவை உடனடியாக அமைக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

அமரபுர மகா பீடத்தில் இடம்பெற்ற நிகழ்வில் அவர் இதனை குறிப்பிட்டார்.

நாட்டின் ஜனநாயகத்தை நடை முறையில் பலப்படுத்துவதும், இன, மத நல்லிணக்கத்தை வளர்ப்பதும் அனை வரின் பொறுப்பென அவர் குறிப்பிட் டார்.

பௌத்த மதத்துக்கு வழங்கப்பட்ட சிறப் பிடத்துடன், பிற மதங்களுக்கும் உரிய பாதுகாப்பும் மரியாதையும் கிடைத்தால், தேசிய ஒற்றுமை மேலும் வலுவாகும் எனவும் சஜித் பிரேமதாஸ தெரிவித் தார்.

சமாதானம், சகோதரத்துவம் மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவ தற்கும் பல்வேறு சூழ்நிலைகளில் எழும் சவால்களை எதிர்கொள்வதற்கும் தேசிய ஒருமைப்பாட்டு குழுவை ஜனாதிபதி தலை மையில் ஸ்தாபித்து, சர்வ மதத் தலை வர்கள் மற்றும் சர்வ கட்சி பிரதிநிதிகள் பங்கேற்புடன் இதனை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித் தார்.

ஜனநாயக சமூகத்தில் மதத்தையும் இனத்தையும் அடிப்படையாகக் கொண்டு செயற்படுவது குறுகிய மனப்பான்மை கொண்ட நடவடிக்கையாக அமையும். குறுகிய கால பிரபலத்திற்காக நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் நெருக்கடி களை பிரச்சினைகளை உருவாக்கி, தூண்டி விட்டு நாட்டின் ஒற்றுமைக்கு சவால் விடுக்கப்படுவதனால், இந்த சவால் களை வெற்றி கொண்டு ஒற்றுமை சமாதா னத்தை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள் ளப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.








# குச்சவெளியில் மாவீரர் பெற்றோர் மதிப்பளிப்பு




திருகோணமலை, குச்சவெளியில் நேற்று மாவீரர் பெற்றோர் மற்றும் உரித்துடையோர் மதிப்பளிப்பு நிகழ்வும், மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வும் நடைபெற்றது. **(படங்கள்:-எஸ்.கீதபொன்கலன்)**







# கொழும்பு - கண்டி வீதி மீண்டும் திறக்கப்பட்டது

மண்சரிவு அபாயம் காரணமாக கடந்த 04 நாட்களாக மூடப்பட்டிருந்த கொழும்பு – கண்டி வீதியின் பஹல கடு கண்ணாவை பகுதி நேற்று மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

இந்த வீதியினூடாக மிகுந்த அவதானத்துடன் பயணிக்குமாறு வீதி அபிவிருத்திஅதிகாரசபையின்பணிப்பாளர்நாயகம் கே.டபிள்யூ கன்டம்பி தெரிவித்தார்.

வாகனங்களை நிறுத்தி பார்வையிடுவது அல்லது கேளிக்கைகளில் ஈடுபடுவதை தவிர்க்குமாறும் அவர் சாரதிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பஹல கடுகண்ணாவை வீதியை இருவழிப் பாதையாக திறப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டார்.

மழையுடனானவானிலைகாரணமாக கொழும்பு – பதுளை இரவுநேர தபால் ரயில் சேவை மறு அறுவித்தல் வரை நானுஓயா வரை மட்டுபடுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

# 3 லட்சத்திற்கும் அதிகமானோர் வேலையில்லாமல் இருகின்றனர்

## பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவிப்பு



நாட்டில் தற்போது 365,951 பேர் வேலையில்லாமல் இருகின்றனர் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 4.5 ஆக இருந்த வேலையின்மை விகிதம் 2025 ஆம் ஆண்டில் 3.8 ஆகக் குறைந்துள்ளதாக அவர் கூறினார்.

இதே நேரத்தில், 2024 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் 4.7 ஆக இருந்த வேலையின்மை விகிதம் 2025 இல் 3.8 ஆகக் குறைந்துள்ளதாகத் தெரிவித்தார்.

கல்வித் தகுதிகளின் அடிப்படையில் க.பொ.த சாதாரண தரத்திற்குக் கீழே உள்ள 103,308 பேரும் க.பொ.த சாதாரண தரத்தில் தேர்ச்சி பெற்றவர்களில் 91,405 பேரும் வேலையில்லாதவர்களின் எண்ணிக்கையில் அடங்குவர்.

மேலும் க.பொ.த உயர்தரத்தில் தேர்ச்சி பெற்ற 128,984 பேரும் , இளங்கலைப் பட்டம் மற்றும் உயர் கல்வித் தகுதிகள் பெற்ற 42,254 பேரும் வேலையில்லாதவர்களின் எண்ணிக்கையில் அடங்குவதாகப் பிரதமர் தெரிவித்தார்.

இவர்களில், 12,000க்கும் மேற்பட்ட பட்டதாரிகளுக்கு ஏற்கனவே வேலை வழங்கப்பட்டுள்ளது, மீதமுள்ளவர்களுக்கும் கொள்கை அறிக்கையில் கூறப்பட்டுள்ளபடி வேலை வழங்கப்படும்.

இதற்கிடையில், ஆசிரியர் நியமனங்கள் தொடர்பான வழக்குகள் தற்போது முடிவுக்கு வந்துள்ளதாகவும், மேல்முறையீட்டு நீதிமன்றம் அதிகாரப்பூர்வமாக இது குறித்து அறிவித்தவுடன் ஆட்சேர்ப்பு தொடங்கும் என்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

## சீரற்ற காலநிலை காரணமாக

# கிழக்கு முஸ்லிம் பாடசாலைகளுக்கு மறு அறிவிப்பு வரும் வரை விடுமுறை

கிழக்கு மாகாணத்தைப் பாதிக்கும் சீரற்ற காலநிலை மற்றும் சூறாவளி அபாயத்தைக் கருத்தில்கொண்டு, மாகாணத்தில் உள்ள அனைத்து முஸ்லிம் பாடசாலைகளுக்கும் இன்று முதல் மறு அறிவிப்பு வரும் வரை விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

சூறாவளி நிலைமை முழுமையாக தணிந்தவுடன் பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்த லால் ரத்னசேகர தெரிவித்துள்ளார்.





## மாவீரர் வாரத்தையொட்டி

# குடத்தனை வடக்கில் இரத்த தான நிகழ்வு

(பூ.லின்ரன்)

மாவீரர் வாரத்தையொட்டி குடத்தனை வடக்கில் இரத்த தான நிகழ்வு நேற்று முற்பகல் 9:00 மணியிலிருந்து பிற்பகல் 1:00 மணிவரை இடம்பெற்றது.

முன்னதாக மாவீரர்களுக்குப் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்ட பின்னர் மாவீரர் பெற்றோர், உரித்துடையோர் 20 பேர் இரத்த தானம் வழங்கினர். அதன்பின்னர் மாவீரர்கள் நினைவாக மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

குடத்தனை வடக்கு இளைஞர்களின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.









# சுப்பர்மடத்தில் மேதகுவின் பிறந்தநாள் நிகழ்வு

தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரனின் 71ஆவது பிறந்த நாளை பருத்தித்துறை - சுப்பர்மட மக்கள் ஊர் கூடி கொண்டாடி மகிழ்ந்துள்ளனர்.

நேற்று மாலை 5.30 மணிக்கு அதிகளவான மக்கள் ஒன்றிணைந்து கேக் வெட்டி கொண்டாடினர்.










# பருத்தித்துறையில் மேதகுவின் பிறந்தநாள் நிகழ்வு

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரனின் 71 ஆவது பிறந்த நாள் பருத்தித்துறை நகரில் கொண்டாடப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகரில் அமைக்கப்பட்டுள்ள மாவீரர் நினைவிடத்தில் நேற்று நண்பகல் 12.00 மணி அளவில் மாவீரர் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது. மாவீரர்களது சகோதரன் ஒருவர் பொதுச்சுடர் ஏற்றியதை தொடர்ந்து நகரசபை தவிசாளர், உறுப்பினர்கள், பொதுமக்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

தொடர்ந்து, மேதகு வே.பிரபாகரனின் 71 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு பருத்தித்துறை நகர் பகுதியில் நின்ற பொதுமக்களுக்கு நகரபிதா வின்சென் டீ போல் தலைமையில் கேக் வழங்கப்பட்டு கொண்டாடப்பட்டது.

வீதியால் சென்ற பொதுமக்கள் ஆர்வத்துடன் கேக்கினை பெற்று மகிழ்வை வெளிப்படுத்தி இருந்தனர்.















# 150 மில்லிமீற்றருக்கும் அதிக மழை; பல பகுதிகளிலும் வெள்ள அபாயம்

கிழக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் பொலன்னறுவை மாவட்டத்திலும் 150 மில்லிமீற்றருக்கும் அதிக பலத்த மழை பெய்யக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் 100 மில்லி மீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகும் சாத்தியம் காணப்படுவதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

தென்மேற்கு வங்காள விரிகுடாவில் நிலவும் குறைந்த காற்றமுத்த மண்டலம் அடுத்து வரும் 30 மணித்தியாலங்களில் காற்றமுத்த தாழ்வுமண்டலமாக வலுவடையக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் தாக்கத்தால் எதிர்வரும் நாட்களில் நாட்டில் மழை மற்றும் காற்றின் தன்மையில் அதிகரிப்பு ஏற்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு, வடமத்திய, வடமேல், மேல் மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மற்றும் மாத்தளை மாவட்டங்களிலும் இடைக்கிடையே மணித்தியாலத்திற்கு 50 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய அனர்த்தங்களிலிருந்து தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

இதனிடையே, அதிக மழை காரணமாக கல் ஓயா, மாதுரு ஓயா, யான் ஓயா, முந்தெனி ஆறு உள்ளிட்ட ஆறுகளை சூழவுள்ள பகுதிகள் சிறியவிலான வெள்ள மட்டத்தை எட்டியுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், பிரதான நீர்த்தேக்கங்கள் உள்ளிட்ட 50 இற்கும் அதிக நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

அதிக மழை காரணமாக போவதென்ன நீர்த்தேக்கத்தின் 06 வான்கதவுகள் நேற்று முற்பகல் திறக்கப்பட்டுள்ளன.

இதன்காரணமாக அம்பன பாலம் நீரில் மூழ்கியுள்ளதாக இலங்கை மகாவலி அதிகார சபையின் கடமைநேர பொறியியலாளர் புத்திக நவரத்ன தெரிவித்தார்.

உயர்தர பரீட்சைகளுக்கு தோற்றும் மாணவர்கள் மாற்று வழிகளை பயன்படுத்த வேண்டுமென அவர் அறிவுறுத்தினார்.

வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளமையால் அம்பன் கங்கையின் இருமருங்கிலும் வசிக்கும் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கனமழை காரணமாக இப்பன்கட்டுவ நீர்த்தேக்கத்தின் வான்கதவு திறக்கப்பட்டுள்ளதுடன் தம்புலு ஓயாவிற்கு செக்கனுக்கு 1000 கனஅடி நீர் விடுவிக்கப்படுகின்றது.

கலாவாவியின் வான்கதவு திறக்கப்பட்டுள்ள நிலையில் கலாஓயாவிற்கு செக்கனுக்கு 6000 கனஅடி நீர் விடுவிக்கப்படுவதாக இலங்கை மகாவலி அதிகார சபை தெரிவத்துள்ளது.

தெதுரு ஓயா, வெஹெரகல, தப்போவ உள்ளிட்ட 50-க்கும் அதிக நீர்த்தேக்கங்கள் தற்போது வான்பாய்வதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# 12 மாவட்டங்களுக்கு தொடர்ந்தும் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுப்பு

மழையுடனான வானிலை காரணமாக நுவரெலியா மாவட்டத்தின் ஹங்குராங்கெத்த மற்றும் வலப்பனை பிரதேச செயலக பிரிவுகள், கண்டி மாவட்டத்தின் உடுதும்புர பிரதேச செயலக பிரிவிற்கும் மண்சரிவு தொடர்பில் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மண்சரிவு அபாயமுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்கள் குறித்த அறிவித்தலுக்கமைய, அப்பகுதிகளிலிருந்து வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, பதுளை, காலி, கண்டி, கேகாலை, மாத்தறை மற்றும் இரத்தின



புரி ஆகிய மாவட்டங்களின் சில பிரதேச செயலக பிரிவுகளுக்கு இரண்டாம் கட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு,பதுளை,களுத்துறை,கண்டி, கேகாலை, குருணாகல், மாத்தளை, மாத்தறை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களின் சில பிரதேச செயலக பிரிவுகளுக்கு முதலாம் கட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டை சூழவுள்ள அனைத்து மீன்பிடி படகுகளும் மறு அறிவித்தல் வரை கடல்சார் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தவிர்க்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

அடுத்த அறிவிப்பு வெளியாகும் வரை மீனவர்கள் மற்றும் கடல்சார் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டுமென திணைக்களம் வலியுறுத்தியுள்ளது.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடரும் அடைமழை பல பிரதேசங்களுக்கான போக்குவரத்து துண்டிப்பு

## 210 பேர் உறவினர் வீடுகளில் தஞ்சம்; 26 வீடுகள் சேதம்



(கனகராசா சரவணன்)

சீரற்ற கால நிலையை அடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் அடை மழை தொடர்ந்து பெய்து வருகிறது. இதனால் தாழ் நிலப்பகுதிகள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன. 8 பிரதேச செயலகப் பிரிவிகளிலுள்ள 62 குடும்பங்களைச் சேர்ந்த 210 பேர் வீட்டை வெட்டு வெளியேறி உறவினர் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர். 26 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பித்த மழை சீரற்ற கால நிலையால் தொடர்ந்து பெய்து வருகிறது இந்நிலையில் மாவட்டதிலுள்ள குளங்கள் நிரம்பி வருகின்றன. தாழ் நிலப் பிரதேசங்கள், வயல் நிலங்கள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன. காற்றினால் பல பிரதேசங்களில் வீதிக்கு குறுக்கே மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன. இவற்றை அந்தந்தப் பிரதேச பிரதேச சபையினர் வெட்டி அகற்றி வருகின்றனர்.

இதேவேளை இந்த அடைமழையை அடுத்து கிரான் தாம்போதிக்கு மேலால் வெள்ள நீர் பாய்ந்து ஓடுவதால் கிரானுக்கும் புலிபாய்ந்தகல்லுக்கும் இடையே உள்ள போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது

அதேவேளை மட்டக்களப்பு, வவுணதீவு வலையிறவு பாலம் மற்றும் மட்டக்களப்பு சுமைதாங்கி தாம்போதிகளின் மேலால் வெள்ள நீர் பாய்ந்தோடுவதால் மட்டக்களப்பு நகருக்கும் வவுணதீவுக்கும் இடையேயும் புதூருக்கும் மட்டக்களப்பு நகருக்கம் இடையிலான போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுள்ளது.

இதே போன்று வெல்லாவெளி தாம்போதியினால் வெள்ளநீர் பாய்ந்தோடுவதால் வெல்லாவெளிக்கும் மண்டூருக்கும் இடையிலான போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு திருப்பெருந்துறை பிரதேசம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதையடுத்து அந்த பகுதிக்கான போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுள்ளது

அடை மழையால் மீனவர்கள் மீன் பிடிக்க கடலுக்கு செல்வதை தவிர்த்துள்ளனர். வீதிப் போக்குவரத்துக்கள் குறைவடைந்துள்ளன. மக்களின் இயல்பு வாழ்க்கை செயலிழந்துள்ளது. தொடர்ந்து காற்றுடன் அடைமழை பெய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.









யாழ் ஊடக அமையம்
JAFFNA PRESS CLUB
යාපනය මාධ්‍ය සමාජය
84 A, Rasavin Thoddam Road, Jaffna, Sri Lanka.

# அரசின் ஊடகக் கொள்கையை யாழ். ஊடக அமையம் நிராகரிப்பு

வடக்கு கிழக்கு உள்ளிட்ட இலங்கைத் தீவில், ஊடகத்துறையில் ஊடகவியலாளர்கள் தங்கள் அறிவை மேம்படுத்தி, ஊடகத் தொழிலுக்கு ஏற்ற முறையில் வலுச் சேர்க்கும் நோக்கில், என்ற பெயரில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உருவாக்கியுள்ள ஊடகத் தேசிய கொள்கையை ஏற்க முடியாது என யாழ் ஊடக அமையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஊடக அமையம் நேற்றுப் புதன்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் –

தேசிய ஊடகக் கொள்கையில் உள்ள குறைபாடுகள் மற்றும் பிரதான ஊடக அமைப்புகள் 23 பேர் கொண்ட மீளாய்வுக் குழுவில் இணைக்கப்படாமை தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்த போது, இந்த ஊடகத் தேசிய கொள்கை உருவாக்கப்பட்டது.

இக் கொள்கை உருவாக்கம் தொடர்பாக, உரிய முறையில் ஊடக அமைப்புகளுடன் பேச்சு நடத்தப்படவில்லை. அத்துடன் 2023 ஆம் ஆண்டு இக் கொள்கை தயாரிப்புக்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டு, அது கைவிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், அந்தக் கொள்கையை சில திருத்தங்களுடன் மீளவும் ஆய்வுக்கு உட்படுத்தி பூர்த்தி செய்துள்ளது.

இருப்பினும், தேசிய ஊடகக் கொள்கை யுனெஸ்கோ ஊடக சுதந்திரக் கொள்கைகளுடன் இணங்கவில்லை என்பது தெரிகிறது. இது பத்திரிகை சுதந்திரம் மற்றும் ஊடகங்களின் சுதந்திரம் பற்றிய பெரும் கவலைகளை எழுப்புள்ளது.

பல நாடுகளில் பொதுச் சேவை ஊடகத்தை ஒழுங்குபடுத்துதல், ஊடக உரிமையில் வெளிப்படைத் தன்மையை அமுல்படுத்துதல் மற்றும் கலப்பு ஊடக உரிமையைக் கட்டுப்படுத்துதல் அதாவது அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் இரண்டையும் ஒரே நிறுவனம் வைத்திருக்கும் முறைமையை தேசிய ஊடகக் கொள்கை உரிய முறையில் கட்டுப்படுத்தவில்லை.

பன்முகத்தன்மை, சுதந்திரமான பத்திரிகையை உறுதி செய்தல் போன்றவற்றுக்காக கலப்பு ஊடக உரிமை பல நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ளது. ஆகவே இது பற்றி அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்.

ஏனெனில், இலங்கையில் உள்ள அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் அநேகமானவை, அரசியல் பின்னணி கொண்டவை. வேறு சில ஊடக நிறுவனங்கள் அரசியல் குடும்பங்களுக்குச் சொந்தமானவை.

ஆகவே அரசியல் பின்னணி கொண்ட ஊடக நிறுவனங்களை கட்டுப்படுத்தக் கூடிய அளவுக்கு ஊடகத் தேசியக் கொள்கை அமையவில்லை என்பதை பகிரங்கமாகக் கண்டிக்கிறோம்.

ஊடகத் தேசிய கொள்கை பற்றி ஊடக அமைப்புகள் உள்ளிட்ட 21 செயற்பாட்டு அமைப்புகளுடன் உரையாடப்பட்டதாக சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ நாயக்கா கூறியிருந்தார்.

ஊடக அமைப்புகள் கலந்துரையாடியமையை மறுக்கவில்லை. ஆனால் ஊடக அமைப்புகளினால் முன்வைக்கப்பட்ட பல கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

குறிப்பாக போர்க்காலத்திலும் 2009 இற்கு பின்னரான சூழலிலும் கொல்லப்பட்ட, காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் மற்றும் தாக்குதலுக்கு உள்ளான ஊடக நிறுவனங்கள் பற்றி விசாரணை நடத்த சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு அமைக்கப்பட வேண்டும் என முன்வைக்கப்பட்ட கோரிக்கை ஏற்கப்படவில்லை.

மாறாக, அது சட்டம் சார்ந்த விடயம் என்றும், ஊடகத் தேசிய கொள்கை நடைமுறைக்கு வந்த பின்னர், அதற்குரிய சட்ட ஏற்பாடுகள் செய்யப்படும் எனவும் விளக்கமளிக்கப்பட்டது.

ஆனால் அது ஏற்புடைய விளக்கம் அல்ல. அதேநேரம், ஊடகவியலாளர்கள் எந்த அடிப்படையில் வரையறுக்கப்படுகின்றனர் என்ற சரியான புரிதலும் ஊடகத் தேசிய கொள்கையில் இல்லை.

2023 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஊடக தேசிய கொள்கையை மீளாய்வு செய்து திருத்தம் மற்றும் புதிய விடயங்களை சேர்க்கும் நோக்கில் அநுர அரசாங்கம் உருவாக்கிய 23 பேர் கொண்ட குழுவில் வடக்கு கிழக்கை மையப்படுத்திய ஊடக அமைப்புகளின் பிரதிநிதிகள் இணைக்கப்படவில்லை.

அத்துடன் இலங்கை நாடாளுமன்றத்தில் அங்கீகாரம் பெற்ற ஒரே ஓர் ஊடக அமைப்பான, உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் பிரதிநிதிகள் அந்த 23 பேர் கொண்ட குழுவில் இணைக்கப்படவுமில்லை.

அதேவேளை, ஒப்பாசாரத்துக்காக கொழும்பில் உள்ள அரசாங்கத் தகவல் திணைக்கள அதிகாரிகள் சிலர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவனியா மற்றும் மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களுக்கு நேரடியாக வருகை தந்து ஊடகத் தேசியக் கொள்கை தொடர்பாக விளக்கமளித்தனர்.

ஆனால் தமிழ் ஊடகத்துறை எதிர்நோக்கும் பிரச்சினைகள் கவனத்தில் எடுக்கப்பட்டு அதற்கு ஏற்ப ஊடகத் தேசிய கொள்கை தயாரிக்கப்படவில்லை.

அதேநேரம் அரசாங்க ஊடகங்களை சுயாதீனமாக செயற்படுத்தும் உரிய திட்டங்கள் ஊடக தேசிய கொள்கையில் இல்லை. அரசாங்கத்துக்குச் சாதகமான முறையில் அரச ஊடகங்கள் செயற்படுத்தப்படும் முறைமைகள் தொடர்ந்து பின்பற்றப்படுகின்றன.

ஆகவே யாழ் ஊடக அமையம் அரசாங்கம் உருவாக்கியுள்ள ஊடக தேசிய கொள்கையை ஏற்க முடியாது என்றும், ஊடக அமைப்புகளின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு புதிய ஊடகக் கொ-ள்கை தயாரிக்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றோம்.

– என்று யாழ் ஊடக அமையம் வெளியிட்ட அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வரி வசூலில் மென்மையான முறை; குடியரசுத் தலைவர் வலியுறுத்தல்



வரி வசூலின்போது மென்மையான அணுகுமுறையை கடைபிடிக்க வேண்டும் என குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு தெரிவித்துள்ளார்.

இந்திய வருவாய் பணி பயிற்சி அதிகாரிகள் கூட்ட நிகழ்ச்சியில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு உரையாற்றுகையில்,

"நாட்டை கட்டமைப்பதற்கு வரி வருவாய் மிகவும் முக்கியமானது. இதைக் கொண்டுதான், கல்வி, சுகாதாரம், சமூக நல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே வலுவான இந்தியாவை உருவாக்குவதில் உங்களின் பங்கு முக்கியமானது. ஆனால், வரி வசூலின்போது மென்மையான அணுகுமுறையை கடைபிடிக்க வேண்டும். வரி செலுத்துவோருக்கு ஏற்படும் அசவுகரியங்களை நீங்கள் குறைக்க வேண்டும்.

சாணக்கியர் அர்த்தசாஸ்திரத்தில் கூறியபடி, மலரிலிருந்து தேனை எடுக்கும் தேனீக்களைப் போல வருவாய் துறை அதிகாரிகள் வரி வசூலில் ஈடுபட வேண்டும். இந்திய வரிவிதிப்பு முறையில் மைல்கல் நடவடிக்கையாக நடப்பாண்டு செப்டம்பரில் ஜி.எஸ்.டி-யில் சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இது, தொழில்முனைவு, வேலைவாய்ப்பு மற்றும் மக்களின் வாழ்க்கையை எளிமையாக்கி உள்ளது. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்ற இந்தியாவின் தொலைநோக்கு திட்டத்தை பலப்படுத்தி உள்ளது.

வரி விதிப்பு என்பது ஒரு தடையாக இல்லாமல் நம்பிக்கை மற்றும் நியாயத்தின் பாலமாக செயல்படுவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும். வரி விதிப்பு முறையில் வெளிப்படையான, பொறுப்புணர்வுமிக்க, நவீன தொழில்நுட்ப பயன்பாட்டை அதிகாரிகள் கொண்டு சேர்க்க வேண்டும்.

இளம் அதிகாரிகளான நீங்கள் புதுமையானவர்களாகவும், பகுப்பாய்வு செய்யும் திறன் கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும். உலகளாவிய வர்த்தகம், தொழில்நுட்பம் மற்றும் பொருளாதாரத்தில் ஏற்படும் விரைவான மாற்றங்களுக்கு ஏற்ப உங்களை தகவமைத்துக் கொள்ள வேண்டியது அவசியம்." என்று தெரிவித்தார்.

# விஜய் உடன் இணைகின்றார் அ.தி.மு.க. செங்கோட்டையன்?





அ.தி.மு.கவில் இருந்து விலகிய மூத்த அரசியல்வாதியான செங்கோட்டையன் தனது எம்.எல்.ஏ. பதவியை இராஜினாமா செய்த சில மணி நேரத்திலேயே, விஜய்யை சந்தித்தமை அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை உருவாக்கியுள்ளது. செங்கோட்டையன் இணைவதால் த.வெ.கவின் பலம் கூடுமா என்ற விவாதம் எழுந்துள்ளது.

தமிழகத்தில் இப்போது உள்ள மிக மூத்த அரசியல்வாதிகளில் முதன்மையானவர் செங்கோட்டையன். தி.மு.கவின் பொதுச் செயலாளர் துரைமுருகன் 1971 முதல் இதுவரை 10 ஆவது முறையாக எம்.எல்.ஏவாக பதவி வகிக்கும் மூத்த அரசியல் தலைவர்களில் முதன்மையானவராக இருக்கிறார். அவருக்கு அடுத்தாக 1977 முதல் தற்போது வரை அ.தி.மு.கவில் 9 முறையாக எம்.எல்.ஏவாக இருந்த பெருமையை பெற்றுள்ளார் செங்கோட்டையன்.

எம்ஜிஆர், ஜெயலலிதா காலம் முதல் அதிமுகவின் முக்கியத் தலைவராக இருந்த செங்கோட்டையன், கடந்த சில மாதங்களாகவே அக்கட்சியின் தற்போதைய பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியுடன் கருத்து வேறுபாடு கொண்டிருந்தார்.

அ.தி.மு.கவில் இருந்து விலகியவர்களை ஒருங்கிணைக்க வேண்டும் என குரல் கொடுத்த செங்கோட்டையனை கட்சியிலிருந்து நீக்கி அதிரடி காட்டினார் இ.பி.எஸ். இதனைத் தொடர்ந்து நேற்று காலையில் தனது எம்.எல்.ஏ. பதவியை இராஜினாமா செய்த செங்கோட்டையன், மாலையில் த.வெ.க. தலைவர் விஜய்யை நேரில் சந்தித்து சுமார் 2 மணி நேரம் பேசியுள்ளார். இதன் காரணமாக செங்கோட்டையன் த.வெ.கவில் இணைவது உறுதியாகிவிட்டது.

'செங்கோட்டையனின் வருகை த.வெ.கவுக்கு நிச்சயமாக கூடுதல் பலத்தை சேர்த்துள்ளது உண்மை. ஏனென்றால், விஜயகாந்த் கட்சி தொடங்கியபோது பண்ருட்டி ராமச்சந்திரன் உள்ளிட்ட பல மாற்றுக் கட்சியினர் தே.மு.திகவில் இணைந்தனர்.

கமல்ஹாசன் கட்சி தொடங்கியபோது கூட பல முன்னாள் அரசு அதிகாரிகள், திரைப் பிரபலங்கள் அவரின் கட்சியில் இணைந்தனர். ஆனால், விஜய் கட்சி ஆரம்பித்து இரு ஆண்டுகள் ஆகியும் குறிப்பிடத்தக்க எந்த மாற்றுக் கட்சியினரோ, திரைப் பிரபலமோ, முன்னாள் அரசு அதிகாரிகளோ த.வெ.கவில் இணையவில்லை. அந்தக் குறையை ஒருவழியாக போக்கியுள்ளார் செங்கோட்டையன். எனவே, இது உறுதியாக த.வெ.கவுக்கு பலமாக மாறியுள்ளது' என்கின்றனர் அரசியல் நோக்கர்கள்.



# ஹொங்கொங்கில் தொடர் மாடி குடியிருப்பில் ஏற்பட்ட பாரிய தீ விபத்தில் 13 பேர் உயிரிழப்பு

ஹொங்கொங்கில் உள்ள தாய்போ மாவட்டத்தில் தொடர் மாடி குடியிருப்புத் தொகுதியொன்றில் ஏற்பட்ட பாரிய தீ விபத்தில், ஒரு தீயணைப்பு வீரர் உட்பட, 13 பேர் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

சுமார் 700 குடியிருப்பாளர்கள் உடனடியாக அங்கிருந்து வெளியேற்றப்பட்டு தற்காலிக தங்குமிடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் பலர் தீயில் சிக்கியிருக்கலாம் எனவும், உள்ளே இருப்பவர்கள் தொடர்பில் எவ்வித தகவல்களும் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

புனரமைப்புப் பணிகள் நடந்துகொண்டிருந்த 31 மாடிகள் கொண்ட இந்தக் கட்டடத்தின் வெளிப்புறத்தில் அமைக்கப்பட்டிருந்த மூங்கிலால் ஆன சாரத்தின் வழியாகவே தீ பரவியுள்ளதாகவும், காணொலி காட்சிகளின்படி, அருகருகே அமைந்துள்ள குறைந்தது ஐந்து கட்டடங்கள் தீயினால் சேதமடைந்துள்ளன என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.









# பிரான்ஸில் தேசிய பணிப்புறக்கணிப்பு; ரயில், கல்வி துறை ஸ்தம்பிக்கும் அபாயம்

பிரான்ஸில் பல தொழிற்சங்கங்கள் இணைந்து டிசம்பர் 2, அன்று தேசிய அளவிலான பணிப்புறக்கணிப்பை அறிவித்துள்ளன.

இந்த பணிப்புறக்கணிப்பு, அந்நாட்டு அரசாங்கத்தின் சிக்கனக் கொள்கை நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நடைபெறுகிறது.

இந்த பணிப்புறக்கணிப்பில் முக்கிய தொழிற்சங்கங்கள் பங்கேற்கின்றன.

இவை, அரசு ஊழியர்கள், கல்வித் துறை, ரயில் போக்குவரத்து உள்ளிட்ட பல துறைகளின் பணியாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

அரசு தற்போது தேசிய சபையில் விவாதிக்கப்படும் சட்ட மூலத்தில் 'பெரிய பின்னடைவு' ஏற்படுத்தும் விதிகள் உள்ளன.

அதனைத் திருத்த வேண்டும் என தொழிற்சங்கங்கள் வலியுறுத்துகின்றன.

இந்த பணிப்புறக்கணிப்பு, குறிப்பாக ரயில் போக்குவரத்து துறையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், கடல் போக்குவரத்து இதில் பங்கேற்குமா என்பது இன்னும் தெளிவாகவில்லை.

பிரான்ஸ் அரசாங்கம், ஊழியர்களின் வேதன உயர்வு மற்றும் சிக்கனக் கொள்கை தொடர்பான விவாதங்களை முன்னெடுத்து வருகிறது.

ஆனால், தொழிற்சங்கங்கள், அரசின் நடவடிக்கைகள் பணியாளர்களின் உரிமைகளைக் குறைக்கும் வகையில் உள்ளதாகக் குற்றம் சாட்டுகின்றன.

இந்தபணிப்புறக்கணிப்பு,பிரான்ஸின் பொருளாதாரமும், போக்குவரத்து அமைப்புகளும் பாதிக்கப்படும் அபாயத்தை உருவாக்கியுள்ளது.

டிசம்பர் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள இந்த பணிப்புறக்கணிப்பு, பிரான்ஸின் அரசியல் மற்றும் பொருளாதார சூழ்நிலைக்கு முக்கிய சவாலாக அமையும் என நிபுணர்கள் கருதுகின்றனர்.

# அமெரிக்காவின் ஹவாய் தீவில் வெடித்து சிதறியது எரிமலை



அமெரிக்காவின் ஹவாய் தீவில் உள்ள தேசிய பூங்காவில் கிலாவியா எரிமலை வெடித்து சிதறியுள்ளது.

எரிமலைவெடிப்பைதொடர்ந்து,அதில் இருந்து நெருப்பு குழம்பு வெளியேறி வருகின்றது.

இந்த நெருப்பு குழம்பானது சுமார் 400 அடி உயரம் வரை மேல் நோக்கி எழுந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தொடர்ந்து இந்த எரிமலையின் செயல்பாடுகளை தீவிரமாக கண்காணித்து வருகின்றது.

தற்போது காற்றின் வேகம் காரணமாக எரிமலையில் இருந்து வெளியேறும் சாம்பல் உள்ளிட்டவை தென்மேற்கு திசை நோக்கி செல்ல வாய்ப்புள்ளதாகவும் மற்றும் தற்போது வரை ஹவாய் விமான நிலையத்தில் விமான போக்குவரத்துக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தின் வழக்குகள் வெள்ளம் காரணமாக 2 நாள்களுக்கு ஒத்திவைப்பு

**(வி.ரி.சகாதேவராஜா)**

அம்பாறை மாவட்டத்தில் நிலவும் அசாதாரண காலநிலை மற்றும் வெள்ளப்பாதிப்பு காரணமாக பொது மக்களின் பாதுகாப்பு கருதி சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில. இன்று 27 மற்றும் நாளை 28 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த அனைத்து வழக்குகளும் ஒத்திவைக்கப்பட்டு இருக்கின்றன .

27 ஆம் திகதி நடைபெற இருந்த வழக்குகள் யாவற்றையும் ஜனவரி மாதம் 21 ஆம் திகதி நடத்துவதற்கும், 28ஆம் திகதி நடைபெற இருந்த வழக்குகள் யாவற்றையும் ஜனவரி மாதம் 22 ஆம் திகதி நடத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக நீதிமன்ற பதிவாளர் அறிவித்திருக்கின்றார்.



நீதிவான் நீதிமன்றம் - சம்மாந்துறை

MAGISTRATE'S COURT - SAMMANTHURAI

2025.11.27 ஆம் திகதி வழக்குகள் - 2026.01.21 ஆம் திகதியும்

2025.11.28 ஆம் திகதி வழக்குகள் - 2026.01.22 ஆம் திகதியும்

Judicial Registrar
Magistrate's Court
Sammanthurai





# வணக்கம் செலுத்துவோம்...!



வானுப்பிரியா
சுபாஸ்கரசர்மா

சிங்கள பேரினவாத – அடக்கு முறைக்கு எதிராக தமிழினத்தின் விடுதலைக்காய் போராட புறப்பட்ட மறவர்கள் மரணித்த நினைவு தினம் மாவீரர் நாள் !

கருமேகம் சூழ்ந்து கடும்மழை
பொழியும் கார்த்திகை மாதத்தில்
காந்தல் மலர்களால் பூச்சொரிந்து
வணங்குகின்றோம் உங்களை
எம் நெஞ்சிலே நிறுத்தி!

வடக்கும் கிழக்கும் தமிழர்
தேசம் என்கின்ற உரிமை
போருக்காய் உங்கள் உயிரினை
தியாகம் செய்த முத்துக்களே
உங்கள் கதை முடியவில்லை!

தாயக கனவுடன் சந்தன
பேழைகளில் உறங்கும்
நீங்கள் இனத்தின் விருட்சங்கள்
உம்மை நினைந்துருகி கண்ணீர்
மல்க போற்றுகின்றோம்!

துயிலும் இல்லங்களில்
துயில் கொள்ளும் வித்துக்களே
ஈழத்தின் விருட்சங்களே- நவம்பர்
இருபத்தேழில் தெய்வங்களுக்கு
வணக்கம் செலுத்துவோம்!

# மாவீரர் தினம்

கார்த்திகை நன்நாளில்,
வானில் ஒளிரும் வீரக் கதிர்கள் நினைவில்
தமிழீழ மத்தாயின் சுமையை ஏந்தி,
தியாகத்தின் தென்றல் நம் இதயத்தை தொடும்.

மண்ணுக்காக, நாட்டுக்காக, உயிர் கொடுத்தீர்கள்,
உங்கள் வீரம் நம் கண்கள் முன் பிரகாசிக்கும்
தூய்மையான நம்பிக்கை, தீரா உறுதி,
அமைதி வெற்றிக்கான முன்னோடியானீர்கள்.

அழியாத அன்பு, மறக்கமுடியாத பாதை,
உங்கள் நினைவுகள் நமக்கு மார்க்கமாகும்
கண்ணீரும் வெற்றியும் கலந்த உங்கள் பயணம்,
என்றும் நம் மனங்களில் தீபமாக ஒளிரும்.

பாரதத்தின் கங்கை போல, தமிழின் செல்வம்,
வீரத்தின் சினம் உங்கள் உயிரில் பூத்தது
நாம் வாழும் நாளெல்லாம் உங்கள் நினைவுகளை
மறக்காமல், பாடமாக எடுத்துக் கொள்வோம்.



நடராசா கோபிராம்,
(உளவியல் சிறப்புக்கலை
மாணவன்,
யாழ்.பல்கலைக்கழகம்)

தோல்விகள் வந்தாலும், வீரம் நிலைத்து,
நாட்டின் அக்கரை நிலைகளை பாதுகாத்தீர்கள்
உங்கள் தியாகம், உங்கள் ஆற்றல், உங்கள் உறுதி,
நமது இளைய தலைமுறைக்கு வழிகாட்டும் விளக்கு!

இன்று வரும் நாள்கள்,
மாவீரர்கள் நினைவின் தியாகம், மரியாதை
உங்கள் பெயர்கள் நம் உள்ளங்களிலே உயிர் பெறும்,
உலகெங்கும் ஒளி பாயும் தமிழீழத்தின் வீரர்!

# இன்றைய ராசி பலன்கள் - 27.11.2025




இன்றைய நாள் சிறப்பான நாள். நீங்கள் உங்கள் செயல்களை குறித்த நேரத்துக்குள்ளோ அல்லது அதற்கு முன்போ முடிப்பீர்கள். உங்கள் புத்திசாலித்தனத்தை மேம்படுத்த நீங்கள் சாதகமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

பணியிடத்தில் உங்களுக்குள் மறைந்திருக்கும் திறமைகளை பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் திருப்தி கிடைக்கும், தரமான பணிகளை குறித்த நேரத்தில் முடித்துக் கொடுக்க இயலும்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

புதிய முதலீடுகளில் பங்கேற்பது போன்ற முக்கிய முடிவுகளை இன்று நீங்கள் எடுக்கலாம். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.




நீங்கள் இன்று வெளியிடங்களுக்கு செல்வீர்கள். அது உங்களுக்கு உதவியாகவும் ஆறுதலாகவும் இருக்கும். யதார்த்தமான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது. யோகா அல்லது தியானம் மூலம் அமைதியைப் பெறலாம்.

நீங்கள் இன்று கவனத்துடன் பணியாற்றுவீர்கள். உங்களை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் பணியாற்றுவீர்கள். இதனால் பணியில் தவறுகள் ஏற்படுவது குறையும்.

உங்கள் துணையுடன் பேசும்போது கவனமாக பேச வேண்டும். எண்ணங்களில் தெளிவும் அதனை பேச்சில் வெளிப்படுத்துவதும் உறவில் நல்லிணக்கத்தை மேம்படுத்தும்.

இன்று அதிகம் செலவாக வாய்ப்புள்ளதால் பண விஷயத்தில் கவனம் தேவை.




இன்று பலன்கள் கலந்து காணப்படும். இன்று மனதில் தெளிவு வேண்டும். வருவதை எதிர்கொள்ளுங்கள். ஆன்மீக நடவடிக்கைகளில் ஈடுபடுவது ஆறுதல் அளிக்கும்.

இன்று வேலைகள் கூடுதலாக இருந்தாலும் நீங்கள் சமார்த்தியமாக செயல்படுவீர்கள். பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். இன்று சிறப்பான நாளாக இருக்கும்.

இன்று சிறிது உணர்ச்சிவசப்படுவீர்கள். யதார்த்தமான அணுகுமுறை தேவை. உங்கள் துணையுடன் சிறப்பாக தொடர்பு கொள்வதன் மூலம் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

பணத்தை எவ்வாறு கையாள்வதென்று அறிந்துகொள்ள வேண்டும். இதன் மூலம் செலவை கட்டுப்படுத்தி சேமிப்பை அதிகரிக்க இயலும்.




இன்று தியானம் அல்லது பிரார்த்தனை மேற்கொள்வது மிகவும் அவசியம். அதன் மூலம் எதிர்மறை எண்ணங்களை தவிர்க்கலாம்.மேலும் மனதில் உள்ள தேவையற்ற எண்ணங்களை நீக்கி அமைதி பெறலாம்.

நேர மேலாண்மை திறன் மூலம் இன்று வெற்றி காண்பீர்கள். சிறப்பாக திட்டமிட்டால் இன்று அனைத்தும் உங்களுக்கு சாதகமாக இருக்கும். வேலை அதிகமாக இருப்பதாக உணர்வீர்கள்.

உங்கள் இருவரிடையே நல்ல பிணைப்பு ஏற்பட உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். பேசும் போது உங்கள் வார்த்தைகளில் கவனம் தேவை.

இன்று பண வரவு அதிகமாக இருக்காது. என்றாலும் பணத்தை சிறப்பாக கையாண்டால் தேவையற்ற செலவுகளை கட்டுப்படுத்த இயலும்.




இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்கும். முறையாக திட்டமிடுவதன் மூலம் வளர்ச்சி காணலாம். இன்று ஆற்றலும் உறுதியும் உங்களிடம் நிறைந்திருக்கும். நீங்கள் முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

இன்று உங்கள் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். உங்களிடம் நம்பிக்கையான அணுகுமுறை காணப்படும். அது உங்கள் பணியில் வெளிப்படும்.

நீங்களும் உங்கள் துணையும் இன்று மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். அன்பின் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

பணம் சம்பாதிக்கும் திறமை மேம்படும். இதன் மூலம் சுதந்திரமான நிதி நிலைமையும் சுய சார்பும் காணலாம்.




இன்று ஆன்மீக ஈடுபாடு சிறந்த பலனைத் தரும். யோகா மற்றும் தியானம் மூலமும் பலன் பெறலாம். இதனால் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

இன்று பணிகள அதிகம் இருப்பதாக உணர்வீர்கள். சிறந்த யுக்திகளைக் கையாண்டு கவனமுடன் பணியாற்றினால் இன்றைய செயல்களை உங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள முடியும்.

உங்கள் துணையுடன் பேசும் போது வார்த்தையில் கவனம் தேவை. உங்கள் துணையுடன் ஒத்துப்போவதும் அவரை மகிழ்ச்சியாக வைத்திருப்பதும் அவசியம். புரிந்துணர்வு மிகவும் அவசியம்.

இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். செலவுகளை முடிந்த அளவில் கட்டுப்படுத்தி கையிலிருக்கும் பணத்தில் சமாளிப்பது சிறந்தது.




உங்கள் இலக்குகளை அடைவதில் தடைகள் காணப்பட்டாலும் உங்கள் மனதைரியம் மற்றும் உறுதி மூலம் வெற்றி பெறுவீர்கள். பாதைகள் கடினமாக இருந்தாலும் பலன்கள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். அமைதியாக இருங்கள். வெற்றி நிச்சயம்.

உங்கள் கடின உழைப்பு இன்று உங்களை வெற்றி பெற்ற மனிதனாக்கும். அதிர்ஷ்டத்தை நம்பாமல் உழைப்பை நம்புங்கள். இன்று வேலை அதிகமாக காணப்படும். அதனை நீங்கள் சிறப்பான திட்டத்துடனும் உறுதியுடனும் எதிர்கொள்வீர்கள்.

உறவின் மதிப்பை உங்கள் துணை அறிந்து கொள்ளவும் இருவரும் அவரவர் பொறுப்பை உணர்ந்து கொள்ளவும் சில முக்கியமான விஷயத்தைப்பற்றி இன்று உங்கள் துணையுடன் பேச வேண்டியது அவசியம்.




இன்று உங்களிடம் ஆன்மீக விழிப்புணர்வு காணப்படும். இதன் மூலம் அமைதியும் உங்கள் எண்ணத்தில் தெளிவும் காணப்படும். உங்கள் வெற்றிக்கு இதுவே முதல் காரணமாக அமையும். இன்றைய நாளை சிறப்பாக்குங்கள். உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முயலுங்கள்.

அன்றாடப் பணிகளைக் கூட இன்று கவனமுடன் கையாள வேண்டும். பணிகள் சிறிது அதிகமாக இருக்கும் என்பதால் நீங்கள் சிறிது பதட்டத்துடன் காணப்படுவீர்கள். பதட்டப்படாமல் அமைதியாக இருக்க வேண்டியது அவசியம்.

உங்கள் மனதில் உள்ள தேவையற்ற தடைகளை நீக்கி உங்கள் துணையுடன் வெளிப்படையாகப் பேச வேண்டும். எதைப் பற்றியாவது தெரியப்படுத்த வேண்டியிருந்தால் மனம் திறந்து பேச வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 27.11.2025




இறை வழிபாடும் ஆன்மீக ஈடுபாடும் இன்று உங்களுக்கு வரமாக அமையும். சுய முன்னேற்றத்திற்கான பாதையில் செல்லுங்கள். உங்களுக்கு மாற்றங்கள் ஏற்படும். நீங்கள் விரும்பியதைஅடைய தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டியது அவசியம்.

இன்று மிகவும் முன்னேற்றகரமான நாள். இன்று புதிய பணிகளுக்கான வாய்ப்புகள் கிடைக்கும். இது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.

உங்கள் இருவரிடையே புரிந்துணர்வு காணப்படும். குடும்ப விருந்து விசேஷங்களில் கலந்து கொள்வதன் மூலம் இன்றைய நாள் மறக்க முடியாத நாளாக இருக்கும்.

இன்று நிதிநிலைமை வளர்ச்சிகரமாக இருக்கும்.




உங்களைச் சுற்றியுள்ளவர்களோடு ஒத்துச் செல்லுங்கள். இன்று ஏழை மற்றும் தேவைப்படுவோருக்கு உணவு அல்லது பணம் அளியுங்கள். இன்றைய நாளை கழிக்க ஏதாவது ஒரு பொழுது போக்கு விஷயங்களில் ஈடுபடுங்கள்.

பணியிடத்தில் உங்கள் பொறுமை சோதனைக்குள்ளாகும். அமைதியாக பணிகளை மேற்கொள்ளுங்கள்.இதன் மூலம் பிறரின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் இருவரிடையே எந்தவிதமான அகந்தைப் பிரச்சினையும் வரவிடாதீர்கள். உங்கள் துணையை புரிந்து கொள்ள முயலுங்கள். அவருக்கு ஆதரவு அளியுங்கள். இதன் மூலம் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

இன்று பணத்தை சேமிக்க வேண்டியது முதன்மையானது. கவலையற்ற எதிர்காலத்திற்கு பணத்தை கையாளும் திறமை தேவை.




இன்று மிகவும் உற்சாகமான மகிழ்ச்சியான நாள். இன்று உங்கள் மனதில் திருப்தி நிறைந்திருக்கும்.

பணியிடச் சூழல் இனிமையாக இருக்கும். புதிய வாய்ப்புகள் மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் மகிழ்ச்சி காரணமாக நீங்கள் பல மடங்கு திறனுடன் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையை மகிழ்ச்சியாக வைத்திருக்க விரும்புவீர்கள். அவருக்கு பிடித்தமானதை செய்து இருவரும் ஒன்றாக நேரம் செலவு செய்வீர்கள். இதன் மூலம் உங்கள் வாழ்க்கைத் துணையிடம் அன்பைப் பெருக்க உதவும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று பணம் அதிகமாக சம்பாதிப்பீர்கள். உங்கள் சம்பாத்தியமும் சேமிப்பும் இன்று ஏறுமுகமாக இருக்கும்.




நீங்கள் இன்று உணர்ச்சிப்பூர்வமான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். விரைந்து முடிவெடுக்காதீர்கள். சூழ்நிலைக்கு தக்கவாறு நடந்து கொள்ளுங்கள். ஆன்மீகத்தில் நாட்டம் கொள்வதன் மூலம் விஷயங்களை எளிதாகக் கையாளலாம்.

இன்று பணிகள் அதிகமாக இருப்பதாக உணர்வீர்கள். அதனை மனதில் கொண்டு வருத்திக்கொள்ளாதீர்கள். விரைவாகவும் எளிதாகவும் பணியாற்றுவதைப் பற்றி சிந்திக்க முயலுங்கள்.

கணவன் மனைவிக்கிடையே புரிந்துணர்வும் அனுசரிப்பும் இருப்பது சிறப்பானது. அவரைப் பற்றிய கணிப்பை குறைத்துக் கொள்வதன் மூலம் உறவை மலரச் செய்யலாம்.

பண விஷயத்தில் பொறுமை தேவை சரியான நேரத்தில் உங்களுக்கு பணம் கிடைக்கும்.




# நெடுங்கேணியில் கடும் மழை,வெள்ளத்தால் வைத்தியசாலை செயற்பாடுகள் ஸ்தம்பிதம்!

**(கி.வசந்தன்)**

நெடுங்கேணியில் கடும் மழை காரணமாக வைத்தியசாலையில் வெள்ள நீர் தேங்கியுள்ளது. அதனால் அவசர சிகிச்சை தவிர்ந்த ஏனைய செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

வவுனியா நெடுங்கேணியில் நேற்று மாலை பெய்த கடும் மழை காரணமாக நெடுங்கேணி பிரதேச வைத்தியசாலையில் வெள்ள நீர் தேங்கியுள்ளது.

வெள்ளப. பாதிப்பால் அந்த மருத்துவமனையின் சேவைகள் தற்காலிகமாகக் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அவசர சேவைகள் மாத்திரம் செயல்பட்டு வருகின்றன.

எனவே ஏனைய சுகாதார சேவைகள் தேவையானவர்கள், அருகிலுள்ள வேறு மருத்துவமனைகளைப் பயன்படுத்துமாறு கோரப்பட்டுள்ளது.

வவுனியாவில் கடந்த இரு தினங்களாக தொடர்ச்சியாக மழையுடனான காலநிலை நிலவி வருகின்றமையால் தாழ் நிலப்பகுதிகளில் வெள்ளநீர் தேங்கியுள்ளது. பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது.